Intervention 2012, Volume 10, Number 2, Page 226 - 228

# Summaries in Tamil

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர்களைப் புகைப்படமெடுத்தலில் ஈடுபடுத்தல்: சியெரெலியோனில் சிறுவர் போராளிகளின் 'போட்டோ வொயிஸ்'(photovoice)**

*Myriam Denov, Denise Doucet & A. Kamara*

போட்டோ வொயிஸ் என்பது புகைப்படமெடுத்தல், சமூக விழிப்புணர்வைக் கட்டியெழுப்பல், குழுக் கலந்துரையாடல், சமூக செயற்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய சமூகபங்களிப்புடன் கூடிய ஆய்வு முறையாகும். புகைப்படங்களின் மூலம் விலக்கிவைக்கப்பட்ட அல்லது வலுவிளந்த தனியாட்கள், குழுக்களுக்குத் தமது சமூகத்தின் பலங்கள் மற்றும் சவால்களைப் பதிவுசெய்ய வழிவகுக்கிறது. இந்தக் கட்டுரையானது, சியெரெலியோனில் சிறுவர் போராளிகளுடன் அவர்களின் அனுபவங்கள் மற்றும் மீழ் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை ஆராயும் முகமாகச் செய்யப்பட்ட போட்டோ வொயிஸ் செயற்திட்டம் பற்றிக் கூறுகிறது. இத் திட்டம் எவ்வாறு வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது என்பதைக் கூறுவதற்கு மேலாக, முக்கியமான பிரச்சினைகள், கருத்துக்களை வெளிப்படுத்தும் படங்களையும் கொடுத்துள்ளார்கள். மேலும் இத்திட்டத்தை செயற்படுத்திய அனுபவங்கள், எதிர்காலத்தில் செய்யப்படவிருக்கும் போட்டொ வொயிஸ் செயற்திட்டங்களுக்கான பரிந்துரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

**முக்கிய சொற்கள்:** சியெரெலியோன், 'ிழு-வழஎழைஉந, சமூக அடிப்படையிலான செயல்முறைகள், முன்னாள் சிறுவர் போரா-ளிகள்

---

**ஆப்கானிஸ்தானின் சமூகக் கட்டமைப்புகளை வலுவாக்கல்: வீட்டு வன்முறையைக் குறைத்து மகளிர் அமைப்புகளை மீண்டும் வலியுறுத்துவதற்கான வழிமுறை**

*Bibiane van Mierlo*

ஆப்காளிஸ்தானில் கடும் வறுமை, சமத்துவமின்மை, வன்முறை காரணமாக மனநல சுாதாரம் பாதிக்கப்படுவது ஒரு பெரிய பழுவாகும். ஆப்கானியப் பெண்களின் பல பிரச்சினைகள் உலகில் அனைத்துப் பெண்களுக்கும் பொதுவானதாக இருந்தாலும் அவர்களின் வாழக்கை நிலமையும் அவர்கள் அனுபவிக்கும் சமத்துவமின்மையும் மிகவும் கடினமானவை. இப் பிரச்சினைகளுக்கு நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுகளைக் கண்டுபிடிப்பது மிகவும் சாவாலான விடையமாகும். இச் செயன்முறை பல்வேறு துறைகளை ஈடுபடத்துவதாக அமைய வேண்டும். 2002 ம் ஆண்டு HealthNet TPO ஆனது நங்காரா மாகாணத்தில் சுகாதார செயற்திட்டங்களில் ஈடுபட்டது. சமூகம் சார் உளசமூக இடையீடுகளின் மூலம் மனநலப் பிரச்சினைகளைத் தாமே கையாளுவதற்கான திறனை வளர்பது ஒரு முக்கிய நோக்கமாக இருந்தது. திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது மனநெருக்கடியைக் குறைப்பதற்கு அவற்றிற்குக் காரணமான சமூகக் காரணிகளில் அதிக கவனம் செலுத்துவது முக்கியம் எனத் தெரிய வந்நது. இக் கட்டுரையில், ஒரு சமூகக் கட்டமைப்புகளை வலுவூட்டும் சட்டவரைபின் உதவியுடன் தற்கால நிலமைகள், சாவல்களின் மத்தியில் எவ்வாறு வீட்டுவன்முறையைக் குறைத்தல், மகளிர் நிறுவனங்களை மீள் வலியுறுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன என விபரிக்கிறது.

**முக்கிய சொற்கள்:** ஆப்கானிஸ்தான், (வீட்டு) வன்முறை, பெண்களை வலுவூட்டல், சமூகக் கட்டமைப்புகள்

---

**காபுலில் ஓபியம் பாவிப்பவர்களின் மனநலன்: Médecins du Monde ஆல் செய்யப்பட்ட ஆபத்தைக் குறைக்கும ் பரீட்சார்த்தச் செயற்திட்டம்**

*Marc Vogel, Senop Tschakarjan, Olivier Maguet, Olivier Vandecasteele, Till Kinkel & Kenneth Dürsteler-MacFarland*


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

ஆப்கானிஸ்தானில் ஊசிமருந்து மூலம் ஓபியம் உள்ளெடுப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இப் பழக்கம் பொதுவாக வெளிநாடுகளில் தொடங்கியாலும் ஆப்கானிஸ்தானில் ஊசிமருந்தைத் தொடர்வது வழக்கமாகிவிட்டது. இரத்தம் மூலம் பரவும் HIV போன்ற நோய்கள் பரவும் ஆபத்து இதனால் அதிகரித்துள்ளது. ஆபத்துகளைக் குறைப்பதற்கும் சிகிச்சை வழிமுறைகளைக் கண்டுபிடிக்கவும் உதவும் வகையில், உளவியல் நோய்களுக்கும் ஓபியம் பாவனைக்கும் இடையிலான தொடர்புக் கோலத்தை அவதானிக்கும் முன்னோடிச் செயற்திட்டம் இதுவாகும். காபுலில் உள்ள Médecins du Monde நிலையத்திற்கு வரும் 30 பேருடன் நேர்காணல்களை நடத்தினோம். WHO ன் சர்வதேச நோய்கள் தரப்படுத்தலின் 10 ஆவது திருத்தத்தின் படி நோய் அறிகுறிகள் பட்டியலிடப்பட்டன. வெளிப்பாடுகளின்படி உளவியல் நோய்கள், முக்கியமாக மனவழுத்தம், மனவடு சம்பவத்திற்குப் பின்னரான மன நெருக்கடி என்பன அதிகமாக இருப்பது தெரிவந்தது. உண்மையில் இப் பிரச்சினைகள் சிகிச்சை மற்றும் ஆபத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளால் கட்டுப்படுத்தக் கூடியவை.

**முக்கிய சொற்கள்:** ஆப்கானிஸ்தான், ஆபத்தைக் குறைத்தல், ஹெரோயின், ஓப-ியம், உளவியல் நோய்கள், பல பகுதிகளை ஊடறுக்கும் கற்கை

---

**மனநலன், நன்னிலை என்பவற்றை ஆராயவும் அளவீடுகளைப் பொருத்தமான வகையில் மாற்றியமைக்கவும் குறிப்பிட்ட நோக்கத்துடனான குழுக் கலந்துரையாடல்களைப் (focus group discussions) பயன்படுத்தல்: இலங்கை சம்பவக் கற்கை**

*Eranda Jayawickreme, Nuwan Jayawickreme & Michelle A. Goonasekera*

ஆய்வின் செல்லுபடியாகும் தன்மையை இடமும் சந்தர்ப்பமும் பாதிக்கும். எனவே பல கலாச்சாரங்களுக்கு மத்தியில் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் தமது முடிவுகளில் வரக்கூடிய குழப்பங்களைக் கட்டுப்படுத்தப் பொருத்தமான ஆய்வு முறைகளைக் கையாள வேண்டும். தரப்படுத்தப்பட்ட அளவீடுகளின் இயல்புகளை மதிப்பிடுவதற்குக் குழுக் கலந்துரையாடல்களைச் செய்வது ஒரு முறையாகும். இந்தக் கட்டுரையில் இலங்கை பேராதெனிய பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நன்னிலை, மனநலன் என்பவற்றின் அளவீடுகளின் பொதுத் தன்மையை மதிப்பிடும் 6 குழுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு குழுவிலும் 35-62 வயதுடைய 3 ஆண்களும் 3 பெண்களும் இடம்பெற்றனர். அளவீடுகளில் உள்ள சிக்கல்கள் பல வெளிவந்தன. இதன் பலனாக, கலாச்சாரங்களுக்குள் பொதுமைப்பாடு இல்லாது இருக்கும் வினாக் கொத்து ஒன்று அடையாளம் காணப்பட்டு விலக்கப்பட்டது.

**முக்கிய சொற்கள்:** குழுக் கலந்துரையாடல் செயல்முறை, நன்னிலை, இலங்கை, அகதிகள், உள்நாட்டு யுத்தம், பொதுமைப்பாடு

---

**மனநலன் மற்றும் உளசமூக ஆதரவு வழங்குவோரைப் பட்டியல்படுத்த ஓர் இலகுவான முறையை வடிவமைத்தல்- ஜோர்டான்**

*Mary Jo Baca, Khawla Fayyad, Anita Marini & Inka Weissbecker,*

யுத்தம், பொருளாதார வாய்ப்புகள் குறைவு, அரசியல் ஸ்திரமின்மை போன்ற காரணங்ளால் ஏராளமான ஈராக் அகதிகள் ஜோர்டானுக்கு வருகிறார்கள். ஈராக் அகதிகளின் அடிப்படைத் தேவைகளை வழங்கும் சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற சிறுவனங்கள் அவர்களுக்கு மனநலன் பராமரிப்பு, உளசமூக ஆதரவு (MHPSS) என்பவற்றையும் வழங்கின. ஏராளமான ஆட்கள் மற்றும் பணம் அகதிகளின் தேவைகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் வேளையில் நிறுவனங்களின் சேவையின் உச்சப் பலனை வெளிக்கொண்டுவருவதற்கு அவற்றிற்கிடையிலான ஒருங்கிணைப்பு முக்கியமாகிறது. International Medical Corps என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

உலக சுகாதார நிறுவனத்துடன் சேர்ந்து ஜோர்டானில் 4W (யார், எங்கு, என்ன, எப்போது செய்கிறார்கள்) பட்டியலிடலை மேற்கொண்டது. இது 2009 ல் வழங்கப்பட்ட மனநலன், உளசமூக சேவைகளுக்கு ஆரம்பத்தில் செய்யப்பட்டது. பின்னர் 2010/2011 மற்றும் 2012 ல் பட்டியலில் புதிய விடையங்கள் சேர்க்கப்பட்டன. எழுத்தாளர் இச் செயற்பாடு எவ்வாறு தோற்றம் பெற்று, நாளடைவில் மாறி வந்துள்ளது என விளக்குகிறார். வெளிப்பாடுகளும் முகம் கொடுத்த சவால்களும் குறிப்பிடப்படுகின்றன. பட்டியலிடலால் ஒருங்கிணைப்பும் தகவல் பரிமாற்றமும் நடைபெற்றதற்கு மேலாக, பரிந்துரைகளுக்கான முறைகளை நிறுவனங்களுக்கிடையில் உருவாக்குதல் போன்ற புதிய செயற்பாடுகளுக்கும் வழிவகுத்துள்ளது.

**முக்கிய சொற்கள்:** ஜோர்டான், 4று பட்டியலிடல், ஒருங்கிணைப்பு

---

**முரண்பாட்டிற்ப் பின்னரான மனநலன் மற்றும் உளசமூக சேவைகளைப் பட்டியலிடல்- லிபியா**

***Colleen Fitzgerald, Amera ElKaied and Inka Weissbecker***

2011 ல் லிபியாவில் கடாபி அரசை வீழ்த்திய பாரிய முரண்பாடு நாட்டிலிருந்த சமூக சேவைகளையும் சுகாதார உள் கட்டுமானத்தையம் பாதித்தது. லிபிய மக்களின் ஆதரவுக்குப் பல சர்வதேச நிறுவனங்கள் மனநலன் சேவைகள், உளசமூக சேவைகள் வழங்குவதற்று வந்தன. அரசாங்கம் ஸ்திரமாக இல்லாதிருக்கும் போது திடீரென அதிகரித்துவிட்ட சேவைகளால் யார் என்ன செய்கிறார்கள் என்ற தெளிவு இல்லாமல் இருந்தது. லிபியாவின் புதிய சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் படி International Medical Corps என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் 4W (யார், எங்கு, என்ன, எப்போது செய்கிறார்கள்) பட்டியலிடலை மேற்கொண்டது. இச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த இவ் எழுத்தாளர்கள் தமக்குக் கிடைத்த வெளிப்பாடுகளையும் முகம் கொடுத்த சிக்கல்கள் சவால்களையும் விளக்குகிறார்கள். இக் கருவி முன்னர் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத நிறுவனற்களுக்கிடையில் தொடல்புகளை ஏற்படுத்தி யார் என்ன சேவைகளைச் செய்கிறார்கள் என்ற தகவலைப் பரவலாகக் கிடைக்கச் செய்துள்ளது என்று கூறுகிறார்கள்.

**முக்கிய சொற்கள்:** லிபியா, 4W பட்டியலிடல், ஒருங்கிணைப்பு

---

**எரித்திரியாவில் மிட்வைப் (midwife) ஆக இருந்து எகிப்தில் உளசமூக உதவியாளராக மாறியது வரை: சாவால்களும் வாய்ப்புகளும் நிறைந்த ஒரு கதை**

***Lebona Yohannes***

எகிப்தில் உளசமூக உதவியாளராக இருக்கும் எரித்திரியாவைச் சேர்ந்த இந்த எழுத்தாளர் தான் எவ்வாறு அகதியானர் எனக் கூறுகிறார். நாட்டிலிருந்த ஓடிவரும் போது குடும்பம், தொழில், வருமானம் அனைத்தையும் இழந்துவிட்டார். அகதியாய் இருப்பது எவ்வளவு கடினம் என்று சொந்த அனுபவம் மூலம் அறிந்துள்ளார். முன்னர் மிட்வைப் ஆக இருந்த இவர் தற்போது கய்ரோவில் எரித்திரிய அகதிகளுக்கு உதவும் உளசமூகப் பணியாளாக உள்ளார். தனது சொந்த வாழ்க்கையை மீட்டுப் பார்க்கும் இக் கட்டுரையில், உளசமூக உதவியாளர் ஆனது தனது அபிவிருத்திக்கு உதவிய அதே வேளை எவளவு தூரம் கஷ்டமாக இருந்தது எனக் கூறுகிறார். சக பாடிகளின் கண்காணிப்பு அவரது வாழ்ககையில் நிதானமாக இருக்க முக்கியமாக உதவியுள்ளது.

**முக்கிய சொற்கள்:** நகர்புற அகதிகள், சமூகம் சார் உளசமூக உதவி, எரித்திரியா, எகிப்து



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.